Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNODDAM


வெளியீடு-60 | மே - ஜுன் 2011 | விலை: 10.00

# யூன் 19 :
# தியாகிகள் தினச் சிந்தனை

**நாம் மனித குலத்தின் மகத்தான வாழ்வை கனவு கண்டவர்களை இத்தினத்தில் நினைவு கூருகிறோம்.**

**மானிடர்களின் ஜனநாயக வாழ்வு சார்ந்த பொது நோக்கிற்காக உயிரை அர்ப்பணித்திருக்கிறார்கள்.**

**ஏற்றத் தாழ்வில்லாத சமத்துவமான வாழ்வு இன மத கலாச்சார சமூக தளங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும். உலகில் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் இடையே உறவும், ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டமும், புதியதொரு உலகமும் அவர்களின் கனவுக்கண்களில் எப்போதும் ஒளிர்ந்து கொண்டிருந்தன.**



மானிடத்தின் மகத்தான வாழ்விற்காக போராடியவர்கள் மனிதர்கள் மனிதர்களாக சுதந்திரமாக வாழவேண்டும் என்று பேராவல் கொண்டிருந்தார்கள்.

உலக வாழ்வில் கண்ணியமும், கொஞ்ச நஞ்ச நாகரிகமும், அநீதிகளுக்கு எதிரான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருக்கிறது என்றால் அவை மனித குலத்தின் இடையாறாத போராட்டங்களின் வழி கிட்டியவை.

இவர்கள் தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலையுடன் சாதி, பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கைகள் அனைத்தையும் எதிர்த்தார்கள். மனித குல முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த அனைத்தையும் எதிர்த்தார்கள்.

சாதாரண மக்களின் முகத்தை, அபிலாசையை முன்னிறுத்தி அவர்கள் போராடினார்கள்.

தென்னிலங்கையின் ஜனநாயக உணர்வு கொண்ட மக்களையும் உலகளாவிய அளவில் சுதந்திர போராட்டக்காரர்களையும் அவர்கள் நேசித்தார்கள். பஞ்சமும், பிணியும், பாரபட்சமும், அநீதியும் ஆன வாழ்வை அவர்கள் வெறுத்தார்கள். அதற்காக அவர்கள் தம் வாழ்வைத் துறந்தார்கள்.

அவர்களுடைய இலட்சியங்கள் தோற்றுப்போய் விடாது!

தமிழ் மக்கள் மத்தியில் பாசிசத்தின் குரூரம் தணிந்திருந்தாலும் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் ஒரு இராணுவ சூழலில் கணிசமான மக்கள் பஞ்சைபராரிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த அடிமை வாழ்வும் உதிர்ந்து உலரும்! நாகரிக உலகிற்கு மானிட தர்மத்திற்கு இவ்வாழ்வு ஏற்புடையதல்ல!

உலகமும், அயல் நாடும் இலங்கையில் ஜனநாயகத்துடன் சமூகங்கள் சமத்துவமாக நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

பொது மக்களின் அநியாய உயிரிழப்பிற்கு நீதி நியாயம் வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

தொடர்ச்சி 3ம் பக்கத்தில்

## கிழக்கில் பொருளாதார இயற்கை வளம் உள்ள அரசகாணிகள் பிறருக்கு வழங்கப்படுவது வரையறைசெய்யப்படவேண்டும்! பிரதேச முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமைவழங்கப்படவேண்டும்!

இரா.துரைரெத்தினம் - கிழக்கு மாகாணசபை உறுப்பினர் - பத்மநாபா ஈ-பி-ஆர்-எல்-எவ்



கிழக்கு மாகாணத்தில் 30 வருடங்களுக்கு மேலாக நிகழ்ந்த யுத்தம் காரணமாக- அநேகமாக இயற்கை வளம் உள்ள அரச காணிகள் காடு சார்ந்ததாக இருந்ததன் காரணமாகவும் அப் பகுதி யுத்தப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததாலும் யாரும் அப்பகுதிக்குச் சென்று அரச காணிகளை பெற முடியாமல் இருந்தமை நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். இதேவேளை யுத்தம் காரணமாக பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக அநேகமான வடகிழக்கு தமிழ் வர்த்தகர்கள் வடகிழக்கில் பொருளாதார முதலீடு செய்வதில் தாமதம் காட்டினர். நம்பிக்கையோடு முதலீடு செய்ய அச்சமடைந்தனர்.

அதுமட்டுமின்றி பல திறமைசாலிகளும், முதலீட்டாளர்களும் வெளிநாடுகளுக்கும் தென்னிலங்கைப் பகுதிக்கும் இடம் பெயர்ந்தனர்.

தற்சமயம் யுத்தம் முடிவடைந்த நிலையில் அனைவரும் அனைத்து பகுதிக்கும் போய் வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நல்ல சூழ்நிலையில் தற்சமயம் வட-கிழக்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் பொருளாதார முத லீடு செய்ய ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். முதலீடுகளை ஆரம்பிக்கவுள்ள புதியவர்களுக்கு அரசநிர்வாகத்துறையிலும், அரசியல் தொடர்பிலும் மிகக்குறைந்த அனுபவமே உள்ளது.

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

## வரலாற்று துயர் நீங்க வேண்டும்! தமிழ் மக்கள் மீதான கிடுகிப்பிடி தளர வேண்டும்!



நீண்ட யத்தம் நடந்த நாடுகளில் யுத்தத்திற்கு பிந்திய சமுதாயத்தில் சமாதானம், இணக்கம், ஜனநாயகம் ,மனித உரிமை என்பன முக்கிய கூறுகளாக இருந்திருக்கின்றன.

ஆனால் துரதிஷ்டவசமாக 2009 மே 18 ற்குப் பின்னர் இலங்கையில் இத்தகைய மாற்றங்கள் சிறப்பான முறையில் இடம்பெறவில்லை

வரலாற்று ரீதியாக இழுத்தடிக்கப்பட்டும், தமிழ் மக்களை ஏமாற்றத்திற்கும் - விசனத்திற்கும் உள்ளாக்கி வந்த இனப் பிரச்சனை தீர்வு முயற்சிகள் யுத்தத்திற்கு பிந்திய சூழ்நிலையில் அர்த்தபூர்வமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

அதிகாரப் பகிர்வே அவசியமில்லை என்ற போக்கு பெரிய அளவில் சிங்கள மக்கள் மத்தியலான தலைமைகளிடம் ஏற்பட்டிருக்கிறது. அல்லது மெலிதான வலுவற்ற தீர்வு பற்றி பேசப்படுகிறது.

"ஒரேநாடு ஒரேமக்கள்", "இங்கு சிறுபான்மை பெரும்பான்மை என்று எதுவும் இல்லை" என்ற கோசங்கள், மேலும் தமிழர்கள் 50 வீதமானவர்கள் தெற்கில் வாழ்கிறார்கள் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

இத்தகைய காரணங்களால் வடக்கு - கிழக்கிற்கு அதிகாரங்கள் பகிரப்பட முடியாது என அதிகாரத்தில் உள்ள

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்


தமிழ் தேசிய கூட்டமைப்பா? கதம்ப கூட்டமா?



பக்கம்- 03

கட்டுநாயக்கா- மலையக தொழிலாளர் போராட்டம்



பக்கம்- 04

பக்கம்- 06

அன்பார்ந்த நண்பர்களே! ஆர்வமிகு தோழர்களே!



பக்கம்- 05

இந்திய ஈழ மீனவர்கள் இடையே உறவுப் பாலம் அமைப்போம்



பக்கம்- 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்
Kannoddam



## நெஞ்சு பொறுக்குதில்லையே!!!

நுகர்வுவாத கலாச்சாரம் பெருகிவிட்ட இந் நாட்களில் சமுதாயத்திற்காக இன, சமூக உரிமைகளுக்காக போராடி உயிரை அர்ப்பணித்தவர்களை நினைவு கூரும் பண்பு எம் மத்தியில் வேகமாக மறைந்து வருகிறது.

சமூக மாற்றம், ஜனநாயக உரிமைகள் என்ற உன்னத நோக்கங்களுடன் மரணித்தவர்கள் என்றென்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

இந்திய சுதந்திரத்திற்காக போராடியவர்கள், ஐரோப்பாவில் எழுச்சி பெற்ற பாசிசத்திற்கெதிராகப் போராடியவர்கள், ஆபிரிக்க, பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காக போராடியவர்கள், லத்தீன் அமெரிக்காவில் சமூக மாற்றத்திற்காக போராடியவர்கள், அமெரிக்க சுதந்திரப் போராட்டம், பிரான்ஸ் புரட்சி, ரஷ்ய சீன புரட்சிகள், வியட்நாம் விடுதலை இவ்வாறு உலகின் ஐந்து கண்டங்களிலும் நிகழ்ந்த எழுச்சிகள் அவற்றில் பங்குபற்றியவர்கள் பெருமிதத்துடன் நினைவுகூரப்படுகிறார்கள்.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா கண்ணீரால் காத்தோம் கருகத்திருகூலமோ" என்ற பாரதியின் வார்த்தைக்கு இணங்கவல்லவா எமது இரண்டு தலைமுறை யினரின் மரணங்கள் இலேசாக எடுக்கப்பட்டுவிட்டன.

இவற்றின் கனதியை நாம் மானசீகமாக உணர வேண்டும். தியாகிகளை நினைவுகூருவது என்பது நாம் சரியான வழித் தடத்தில் பயணம் செய்வதற்கான கலங்கரை விளக்காக அமையும்.

மக்களின் சுதந்திரத்திற்காக எழிலார்ந்த வாழ்வுக்காக உயிரைத் தியாகம் செய்வதென்பதற்கு நிகராக இவ் உலகில் வேறொன்றும் கிடையாது. இந்த உலகில் நெளிவு சுழிகள் ஊடாக வளைந்துகொடுத்து வாழ்வதென்றால் இவர்கள் சௌகரியமாக வாழ்ந்திருக்க முடியும்.

நிமிர்ந்த நேர்கொண்ட பார்வை தியாகிகளான தோழர்களிடமும், எமது சக சுதந்திரப் போராளிகளிடமும் காணப்பட்டது.

அவர்கள் தமது வாழ்க்கை அபாயகரமானது, சுதந்திரத்திற்கான போராட்டம் மரணத்தையும் சித்திரவதையையும் பல்வேறு துன்பங்களையும் விளைவிக்கும் என தெரிந்திருந்தும் அதனை துணிவுடன் எதிர்கொண்டார்கள்.

இன்று இந்த தியாகிகளுடன் எந்த பரிச்சயமும் இல்லாதவர்கள் 30 வருட போராட்டத்தில் மக்களின் எந்த நன்மை தீமைகளிலும் பங்குபற்றாதவர்கள் அற உணர்வு கொஞ்சமுமற்ற, சுயநலமிகள் தமிழ் மக்களின் தலைவர்களாக வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஏன் இவ்வாறு நிகழ்ந்தது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எமது போராட்டத்தில் அறம் அருகியதால் போருக்கு பிந்திய சமுதாயத்தில் அறம் சார்ந்த தலைமைத்துவம் உருவாகவில்லையென்று ஒரு வார்த்தையில் சொல்லி விடலாம்.

அதாவது எமது போராட்டத்தில் ஆதிக்கம் வகித்த சர்வாதிகாரப் போக்கு, ஏகபிரதிநிதித்துவ அகங்காரப் போக்கு, சகோதர தமிழ் இயக்கங்களையோ, சகோதர சமூகங்களையோ சகிக்காத போக்கு-சமூகத்தில் எந்த மாறுதல்களையும் விரும்பாத பழமைவாத பிற்போக்குத்தனம்- பிரமாண்டமான வன்முறை இயந்திரத்தை கட்டியமைத்து பாசிசமாக அது உருவெடுத்து தார்மீக உணர்வு கொண்ட போராட்டக்காரர்களையும் மக்களையும் அது அழித்தொழித்து, இறுதியாக தன்னையும் அழித்துக் கொண்டது.

மனிதன் இயற்கையை அழித்து பூமியின் ஒரு பகுதியை பாலைவனமாக்கியது போல எமது சமூகத்தின் சிறந்த கூறுகள், உன்னத மனிதர்கள் அழிக்கப்பட்டு எமது சமுதாயம் தார்மீக நெறிமுறைகள் அறம் ஆகியவற்றை இழந்த பாலைவனமாகியிருக்கிறது.

இந்த தியாகிகளுக்கு வாழ சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் எமது சமுதாயம் எவ்வளவு செழுமை மிகுந்ததாக இருந்திருக்கும். ஏவ்வளவு வீரியம் மிகுந்ததாக இருந்திருக்கும்.

சமூக உணர்வு கொண்ட, சமூக அக்கறை கொண்ட புதிய தலைமுறையும் உருவாகியிருக்குமல்லவா.

இன்று எமது சமுதாயம் முற்போக்கு அரசியல் நலிந்துபோன பாலைவனமாகிவிட்டது. பெருச்சாளிகளும், சமூக வைரசுக்களும் பெருகியிருக்கின்றன. இளைய தலைமுறை நுகர்வு கலாச்சாரத்தில் சிக்கி திணறுகிறது.

யுத்தத்தில் உயிர் உடைமைகளை இழந்தவர்களின் குடும்பங்கள் துரதிஷ்டசாலிகளாக மாற்றப்பட்டுள்ளார்கள்.

எதற்காக தியாகங்கள் நிகழ்ந்ததோ அந்த உன்னத நோக்கங்கள் இன்னும் எய்தப்படவில்லை. எமது மக்களின் வாழ்வில் சுதந்திரமும், ஜனநாயகமும் சமத்துவமும், சமாதானமும் நிலவும் நாளை நோக்கி நாம் சளைக்காமல் பயணம் செய்ய வேண்டும்.

இது இன்று உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் எமது சமூகப் பொறுப்பு! கடமை !!

1ம் பக்கத் தொடர்ச்சி...

## வரலாற்று துயர் நீங்க வேண்டும்! தமிழ் மக்கள் மீதான கிடுகிப்பிடி தளர வேண்டும்!

அரசியல் வாதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

நிலம், பொலிஸ் அதிகாரம், நிதி அதிகாரம் என்பன தேவையில்லை உள்ளூராட்சி மட்டத்தில்தான் அதிகாரங்கள் / பிராந்திய மட்டங்களில் அல்ல என்ற கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.

அது மாத்திரம் அல்லாது உள்ளூராட்சி மட்ட அதிகாரங்கள் மிகவும் மத்தியப்படுத்தப்பட்ட முறைகளை கொண்டு வருவதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்படுகின்றன.

### முன்னுக்குப் பின் முரணான செயல்கள் அதிகரித்துள்ளன.

அதாவது உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட விடயங்கள் ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் மத்திய அரசின் அமைச்சர் ஒருவரின் கீழ் இயங்கும் ஒரு குழுவே தீர்மானிக்கும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. இக் குழுவில் மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகளும் அங்கத்துவம் (ஒப்புக்கு?) வகிப்பார்கள் இதற்கு மக்கள் சபை (ஜனசபா) என்று பெயரும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்படியான ஒரு, சபைக்கு அரசியலமைப்பு நீதிமன்றத்தில் ஆலோசனை இல்லாமல் பாராளுமன்றத்திலோ, மந்திரிசபையிலோ மேற்கொள்ள முடியுமோ தெரியாது.

தவிர இவ்வாண்டிற்குரிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது மாகாணத்தின் வரி வசூலிப்பதற்கான அதிகாரமும் குறிப்பிடத் தகுந்த விவாதமோ, கலந்துரையாடலோ, சுட்டிக்கட்டலோ, எதிர்ப்போ இல்லாமல் மாகாண சபைகளிடம் இருந்து மத்திய அரசிற்கு சத்தமில்லாமல் கைமாற்றப்பட்டுள்ளது.

18வது திருத்தச்சட்டமூலம் மாகாண சபையின் பொலிஸ், நிர்வாக, நிதி அதிகாரங்களுக்கு ஏற்கனவே ஆப்பு வைத்து விட்டது.

நடைமுறையில் கிழக்கு மாகாண சபை குறிப்பிடத் தகுந்த எந்த வேலைகளையும் செய்ய முடியாத அளவிற்கு ஆளுநர் சகல அதிகாரங்களையும் தன்னிடத்தில வைத்திருப்பவராக காணப்படுகிறார்.

வடக்கில் தேர்தல் நடைபெறாத நிலையில் ஆளுநரே மகத்தான அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

13 வது திருத்தச் சட்டமூலம் அது கொண்டுவரப்பட்ட நோக்கங்களையும் சட்டரீதியான அர்த்தங்களையும் இழந்து விட்டது.

பிரதானமாக தமிழ் மக்கள் யுத்தத்திற்குப் பின்னர் தேசிய வாழ்வில் சம பங்காளர்களாக, சுயமரியாதை - கௌரவத்துடன் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

பாரம்பரிய நிலங்கள் பேரினவாத நோக்கங்களுடன் அபகரிக்கப்படுதல், இராணுவ மயமாக்கல், கிடுகிப்பிடி இறுகுதல் என்பனவே நிகழ்வுகளாக இருக்கின்றன.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கெடுதிகளின் சுமைகளை தாங்குதல் இன்னோரன்ன பிரச்சனைகளில் மக்கள் மூழ்கிப் போயுள்ளார்கள்.

சிவில் வாழ்க்கை என்பது எட்டாக்கனியாக மாறிக் கொண்டிருக்கின்றது. தமது தனிப்பட்ட அந்தரங்க வாழ்க்கை மீது படையினரின் தலையீடுகள் மக்களை சினமூட்டியுள்ளன.

- கைதிகள் விடுதலை செய்யப்படுவது
- கொல்லப்பட்ட மக்கள் தொடர்பான நீதி நிலைநாட்டப்படுவது
- காணாமல் போனவர்கள் பற்றி நீதி விசாரணைகள்

இந்த விடயங்கள் தொடர்பாக நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் பொறுப்பு சொல்வது அரசின் கடமை ஆகும்.

நாம் இழந்தவற்றிற்கு எந்தத் தீர்வும் கிட்டவில்லை என்ற விரக்தி எமது மக்களையும் வருங்கால சந்ததியையும் எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதை நினைக்கவே அச்சமாக இருக்கிறது.

### ஐ.நா ஆலோசனை குழுவின் அறிக்கை

இலங்கை யுத்த்தின் இறுதி நாட்கள் தொடர்பாக நீதி நியாயமாக செயற்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும் என்பவற்றையே வலியுறுத்துகிறது.

இலங்கையின் நலனில் அக்கறையுள்ள இந்த நாட்டின் மதிப்பிற்குரிய பிரஜைகள் பலரும் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதையும் இனப்பிரச்சனை தீர்வை துரிதப்படுத்துவதையும் இராணுவ மயமாக்கலை தளர்த்தி சிவிலியன்களில் இயல்பு வாழ்வு முறையை நிர்மாணிப்பதையும் வலியுறுத்தி வருகின்றனர்.

### அரசியல் கைதிகள் அவைருக்கும் பொதுமன்னிப்பு

சமூகங்கள் இடையே சமத்துவமான வாழ்வை நிலை நாட்டுவது சுதந்திர ஜனநாயக வாழ்வொன்றை வலியுறுத்தியுள்ளார்கள்.

இலங்கை - இந்திய வெளி விவகார அமைச்சர்களால் கையெழுத்திடப்பட்ட கூட்டறிக்கையிலும் இவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- சமூகங்கள் இடையே புரிதலை ஏற்படுத்துவதற்கு இதய சுத்தியான முயற்சி
- இடம்பெயர்ந்த மக்கள் தத் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றல்

என்பவையும் மேலதிகமாக வலியுறுத்தப்பட்டள்ளன.

அதிகார பகிர்ந்தளிப்பு, அவசரகாலச் சட்டத்தை நீக்குதல் என்பன இங்கு பிரதானப்படுத்தப்பட்டுள்ளன.

சாரம்சம் என்னவென்றால் மோதல் போக்கு முறையற்றது செய்யப்படவேண்டிய நீதி நியாயமான காரியங்கள் செவ்வனே செய்யப்படவேண்டும்.

அது தமிழர்களையும் சிறுபான்மை சமூகங்களையும் பாரபட்சம் இல்லாது நடத்துவது அபிவிருத்தி என்பவற்றை சாரம்சமாகக் கொண்டுள்ளது.

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இந்த கூட்டறிக்கையை மனசார வரவேற்கிறது.

எமது மக்களின் வரலாற்று துயருக்கு நியாயம் வேண்டும். அவர்களின் மனக்காயங்கள் ஆற்றப்பட வேண்டும். சிங்கள மக்களுடன் சமத்துவமாக, சுயமரியாதை, கௌரவத்துடன் கூடிய வாழ்வொன்று எட்டப்பட வேண்டும்.

தொடர்ச்சியாக ஏமாற்றுதல் என்ற போக்கு இனிமேலும் சகிக்க முடியாதது.

- சிறீதரன -

## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் வரவேற்கிறோம். அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-


EPIC
PO BOX 431
SUTTON SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 A, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

159, கடல்முக வீதி
திருகோணமலை.
026 2227118


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஈழ மீனவர்கள் இடையே உறவுப் பாலம் அமைப்போம்

-சுகு-

இந்தப் பிரச்சனை உணர்ச்சிகரமானது. உறவுகள் பாரம்பரியாமானவை. இருதரப்பு மீனவர்களும் மனந்திறந்து பேசுவதும், இவர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதில் இலங்கை இந்திய அரசுகள் அனுசரணையாக இருப்பதுமே இங்கு முதல் நிபந்தனையாகும்.

முதலாவதும் இறுதியானதும் மீனவர்கள் தமக்குள் பேசித் தீர்வு காண்பதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்

கடலில் பிழைப்பு நடத்தும் மீனவர்களிடையே முரண்பாடுகள் ஏற்படுவது விரும்பத்தக்கது அல்ல

கடல் வளங்கள் பற்றியும் அதன் பயன்பாடு பாதுகாப்பு பற்றி விஞ்ஞான பூர்வமான விளக்கங்கள் கல்வி இருதரப்பு மீனவர்களுக்கும் ஒரே கூரையின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

மீன்வள பற்றாக்குறை ஏற்படும் போது அதனை விருத்தி செய்வதற்கும் அதனை சிறந்த முறையில் பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகளும் வேண்டும்.

மீனவர்கள் அன்றாடம் சுடப்படுவதும் சிறையிடப்படுவதும் ஜென்மப் பகைக்கே வழிவகுக்கும். இதனை விடுத்து பேச்சுவார்த்தை அனுசரித்தல், மீனவ



கடந்த வந்த முப்பது வருடங்களில் மீனவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்றாடம் அடி,உதை, அகதி வாழ்வு அரைவயிற்று கஞ்சிக்காக அலையும் நிலை ஏற்பட்டது. யுத்தம்- சுனாமி-வேறு இயற்கை அனர்த்தங்களாலும் பிரமாண்டமான அளவில் உயிரழிவுகள் நிகழ்ந்திருக்கின்றன.

மக்களிடையே சகோதரத்துவம், கல்வி , சுகாதாரம், குடியிருப்பு பிரச்சனைகளில் அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

பிராந்திய அளவில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெலில் கரையோர மக்களின் வாழ்வு கெடுபிடியானதும் அன்றாடம் வன்முறைக்குள்ளாக்கப்படுவதுமாகவே அமைந்திருக்கின்றது.

கடந்த வந்த முப்பது வருடங்களில் மீனவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்றாடம் அடி,உதை, அகதி வாழ்வு அரைவயிற்று கஞ்சிக்காக அலையும் நிலை ஏற்பட்டது. யுத்தம்- சுனாமி-வேறு இயற்கை அனர்த்தங்களாலும் பிரமாண்டமான அளவில் உயிரழிவுகள் நிகழ்ந்திருக்கின்றன.

இயற்கை அனர்த்தம் இரு தரப்பு மீனவர்க்கும் பொதுவானது. கெடுபிடியான வாழ்க்கையும் இரு தரப்பிற்கும் பொதுவானது தற்போது தமிழக மீனவர்கள் சுடப்படுவதும் வலயங்களை தாண்டியதற்காக இருதரப்பு மீனவர்களும் கைது செய்யப்படுவதுமான நிலை காணப்படுகின்றது.

கடலில் அமைதியான நிலை வேண்டும் அயலவர்கள் தொப்புள் கொடி உறவுகளான நாம் நேசமாக தொழிலில் ஈடுபட வேண்டும்.

இதற்கான வசதிகளை இரு அரசுகளும் சமூக ஆர்வலர்களும், அரசியல் தலைமைத்துவங்கள் வழங்கிட முன்வர வேண்டும்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பா? கதம்ப கூட்டமா?

அனைத்துகட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டிற்கு வர திராணியற்று தமக்குக்கூட ஒற்றுமையான நிலைப்பாடொன்றை எய்த முடியாதளவிற்கு கதம்ப கூட்டமாக இருந்துகொண்டு அரசுடன் பேச்சு நடக்கிறது. அதன் பெறுபேறாக இன்று கிடைத்திருப்பது பச்சத்தண்ணி செனட்சபை.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தி ஒப்புக்கு "செனட்" என்று அரசு விளம்பரம் செய்தபோது தமிழ் தேசிய கூட்டமைப்பு தனக்கும் அந்த செனட்டிற்கும் ஒரு சம்பந்தமும் இல்லையென்பது போல நழுவிக்கொண்டது.

பேச்சுவார்த்தையின் பெறுபேறாக இருந்திருக்க வேண்டியது 60 ஆண்டுகால தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு என்பது.

ஆனால் இங்கு மக்களின் பிரதிநிதிகள், ஏகபிரதிநிதிகள் என்று கூறி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர்கள் யாருக்குமே புரியாத, பிரயோசனமும் இல்லாத எந்த பலமும் இல்லாத, பல்லில்லாத செனட் சபையை பெற்றிருக்கிறார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்துகொண்ட அனுபவம் வாய்ந்த தலைவர்களான ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் ஆகியோரை இந்த பேச்சுவார்த்தைகளில் கதம்பகாரர்கள் இணைத்துக்கொள்ளவில்லை.

இன உரிமைக்கான கடந்த 30 வருடங்களுக்கு மேற்பட்ட செயற்பாட்டில் மழைக்குக்கூட ஒதுங்காத சுமந்திரன் போன்றவர்களை இணைத்துக் கொண்டு



தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்துகொண்ட அனுபவம் வாய்ந்த தலைவர்களான ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் ஆகியோரை பேச்சுவார்த்தைகளில் கதம்பகாரர்கள் இணைத்துக்கொள்ளவில்லை.

வினைத்திறன் இல்லாத சப்பாணி பேச்சுவார்த்தையை நடத்துகிறார்கள்.

கூரை ஏறி கோழிபிடிக்க முடியாதவர்கள் வானமேறி வைகுண்டம் போன கதையாகத்தான் இருக்கிறது.

தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிசும் தான் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக சொல்லியிருக்கிறார்.

இந்தியா, இணக்கப்பாடு இதயபூர்வமாக எட்டப்பட வேண்டும் 13வது திருத்தச் சட்ட மூலம் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்பதையும் தெளிவாகவே சுட்டிக்காட்டியுள்ளது.

அரசு தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியல்ல என்று தெரிவி[illegible]

அது சரிதான். ஆனால் மற்றக்கட்சிகள் என்னும் போது ஈ.பி.டி.பி தவிர்ந்த ஏனைய கட்சிகளை கருத்திற்கெடுத்ததாக தெரியவில்லை.

சிறிதோ பெரிதோ அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாகவே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறான புறக்கணிப்புக்கள் அலட்சியங்கள் கைவிடப்பட வேண்டும். தமிழ் மக்களின் சகல பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். சிறப்பான ஆலோசனைகள் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் வரலாம்.

இதேபோல் மலையக, முஸ்லீம் மக்கள் பிரதிநிதிகளுடனும் பேசப்பட வேண்டும்.

ஆனால் காலத்தை இழுத்-[illegible]

1ம் பக்கத் தொடர்ச்சி ...

## யூன் 19 :
## தியாகிகள் தினச் சிந்தனை



**ஈழ தமிழ்பேசும் மக்களின் வாழ்வில் சுதந்திரத்தையும், சக சமூகங்களினதும், உலக மானிடத்தினதும் சகோதரத்துவத்தையும் நேசித்த தோழர் நாபா - தோழர்கள் - அனைத்து சுதந்திர போராட்டக்காரர்களும் இத்தருணத்தில் நினைவு கூரப்பட வேண்டும்**

இலங்கையில் எமது மக்களுக்கு நீதி கிட்டவில்லை என்பதை உணர்த்துவதற்காகவே எமது தோழர்கள் போராடினார்கள்.

அரச பயங்கரவாதமும், சிங்கள மக்கள் மத்தியில் போராட்ட அறநெறிகளை புறக்கணித்த ஜேவிபி பாசிச கிளர்ச்சியும்,தமிழ் மக்கள் மத்தியிலிருந்து உருவான பாசிச பயங்கரவாதமும் வெவ்வேறு காலகட்டங்களில் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இந்நிலையில் அறஞ்சார்ந்து சமூகத்தின் விடியலுக்கு போராடியவர்களே சமூக கனவுகளை ஈடேற்றுவதற்கான உந்து சக்தியாக செயற்பட்டிருக்கிறார்கள்.

தமிழர்களின் போர்ாட்டத்தில் இருந்த நியாயத் தன்மைகளே இன்று இன உரிமைகள், மனித உரிமைகள், சமூகங்கள் இடையே புரிந்துணர்வு அடக்கு முறைக்கு ஏதுவாக அமையும் சட்டங்களை நீக்குவது தொடர்பான கோரிக்கைகள் வலுவடைய காரணமாய் அமைந்துள்ளன.

எனவே ஈழ தமிழ்பேசும் மக்களின் வாழ்வில் சுதந்திரத்தையும், சக சமூகங்களினதும் ,உலக மானிடத்தினதும் சகோதரத்துவத்தையும் நேசித்த தோழர் நாபா- தோழர்கள்- அனைத்து சுதந்திர போராட்டக்காரர்களும் இத்தருணத்தில் நினைவு கூரப்பட வேண்டும்.

இவர்களுடைய லட்சிய கனவுகள் ஈடேற மன உறுதியுடன் நாம் செயற்பட வேண்டும்.

இதுவே அர்த்த பூர்வமான தியாகிகள் தின நினைவு கூரலாக இருக்கும் .

- பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பனிகள் நட்டத்தில் இயங்குமாயின்...

# தோட்டங்களை தொழிலாளர்களுக்கு வழங்குக!



*கலாநிதி சந்திரபோஸ்*

"கம்பனிகள் நட்டத்தில் இயங்குமாயின்... தோட்டங்களை தொழிலாளர்களுக்கு வழங்குக!"

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஆய்வாளரும் திறந்த பல்கலைகழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சந்திரபோஸ் இவ்வாறு தெரிவிக்கிறார்.

ஏறக்குறைய 60 வீதமான பெருந்தோட்ட நிலங்களை கம்பனிகளே கடந்த 15 வருடமாக நிர்வகிக்கின்றன.

1996இல் 129 மெட்ரிக் தொன்னாக காணப்பட்ட தேயிலை உற்பத்தி இப்போது 150 மெட்ரிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

1996இல் 80 வீதமான தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக அமர்த்தியிருந்த இக் கம்பனிகளிடம் இப்போது 60 வீதமாக குறைத்துக் கொண்டுள்ளனர்.

தமது உற்பத்திக்காக 40 வீதமான தொழிலாளர்களை தற்காலிக தொழிலாளர்களை எடுத்தே வேலைகளை வாங்கிக் கொள்கின்றனர்.

1850 களில் பிரித்தானியர்களால் கட்டிக்கொடுக்கப்பட்ட லயன் காம்பிராக்களில் அடக்கி வைத்துவிட்டு குறைந்த மருத்துவ சேவைகளை செய்யும் கம்பனிகள் நட்டத்தில் இயங்குகின்றன என்று கூறுவது வேடிக்கையாக உள்ளது.

தேயிலைத் தொழில் நட்டம் என்று கூறிக்கொண்டிருக்க கம்பனிகள் தமது தொழிலை மூடி விட்டார்களா? இந்த 23 கம்பனிகளும் ஆரம்பத்தில் இருந்து இத் துறையில் தேயிலைத் தொழிலை செய்து வருகின்றன. தேயிலை உற்பத்தி மாத்திரமின்றி உற்பத்தியை சந்தைக்கு கொண்டுவருதல் ஏல விற்பனையில் ஈடுபடுதல், ஏற்றுமதி, பசளை, உற்பத்தி தோட்டங்களில் கூட்டுறவு சங்கங்கள் என்று எல்லா வலை பின்னலிலும் ஈடுபட்டுள்ள இக் கம்பனிகளிடம் உற்பத்திக்கான செலவு பற்றிய ஏற்றுக் கொள்ளக் கூடிய கணிப்பீடுகள் எதுவும் இல்லை. சகட்டுமேனிக்கு உற்பத்தி செலவில் தொழிலாளர்களின் வேதனமே அதிகம் என்கின்றனர். இது பற்றிய விபரங்கள் எதனையும் வெளிப்படுத்துவதில்லை. இதுபற்றி தனி நபர்கள் ஆய்வாளர்கள் சுதந்திரமான மதிப்பீடுகளை மேற்கொள்ள அவர்கள் உண்மையான தகவல்களை தருவதில்லை.

16.கி.கி பறிக்கும் கொழுந்தினால் 4.கி.கி தேயிலை உற்பத்தி செய்யலாம். இதனை விற்பனையால் கடந்த ஆண்டில் ரூபா **320 x 4 = 1280** விற்பனை செய்துள்ளன. இதனைப் பெற்றுக்கொள்ள நாளாந்த வேதனம் மற்றும் இதர கொடுப்பனவுகள் செலவுகள் உட்பட ரூபா 800 செலவாகும் என்றாலும் தொழிலாளர் பறிக்கும் ஒவ்வொருநாள் கொழுந்தின் மூலம் (ரூபா1280-800) ரூபா 480 மேலதிக இலாபம் தோட்டக் கம்பனிகளுக்கு இல்லாமல் இல்லை.

தோட்டக் கம்பனிகள் மாதம் 25 நாள் வேலை வழங்கி அதில் 75 வீதம் வருபவர்களுக்கு அதாவது 19 நாள் வருபவர்களுக்கு மட்டுமே ரூபா 405 வழங்குகின்றது. இதில் ஒரு நாள் தவறவிட்டாலும் (25 நாளில் 18 நாள்) அதனை 72 வீத வரவாக கணிப்பிட்டு நாளாந்தம் ரூபா 285 மட்டுமே வழங்குகின்றனர். இதை எந்தளவில் நியாயமானதென கம்பனிகள் கருதுகின்றன? கம்பனிகள் தோட்டங்களில் எல்லாவிதமான கைங்கரியங்களையும் பயன்படுத்தி எப்படியாவது ஆட்களை 18 நாட்களுக்கு மேல் வேலைக்கு வராதவாறான பதிவுகளை செய்துகொள்வதில் வல்லுனர்களாக இருக்கின்றனர்.

இலங்கையின் தேயிலையை உலகில் 60க்கு மேற்பட்ட நாடுகள் வாங்குகின்றன. உலகிலேயே மிக பெரிய தேயிலை ஏல விற்பனை கொழும்பில்தான் இடம்பெறுகிறது. வாசனைமிக்க அதி உயர் தேயிலையை உற்பத்தி செய்யும் சர்வதேச புகழ்பெற்ற தேயிலையை இக் கம்பனிகளே உற்பத்தி செய்கின்றன.

கம்பனிகள் குறைந்தது ரூபா 500 வழங்குவதற்கு தயார் இல்லை என்றால் கம்பனிகள் தமது தோட்டங்களை தொழிலாளர்களுக்கு பிரித்து கொடுத்து இலங்கையில் வெற்றிகரமாக இயங்கும் சிறு தோட்டங்களின் அமைப்பை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும்.

1975க்கு பின்னர் இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களில் தேயிலை, இறப்பர் நிலங்களை அங்குள்ள முன் பின் அனுபவமில்லாத மக்களுக்கு சிறு சிறு அலகுகளாக பிரித்துக் கொடுத்தனர். இப்போது இவ்வாறான சிறு தேயிலை உடமையாளர்களாக சுமார் 300,000 உள்ளனர். இவர்களிடம் 90,000 ஹெக்டெயர் காணிகளே உள்ளன. ஆனால் மொத்த தேயிலை உற்பத்தியில் 65 வீதத்தினை வழங்குகின்றனர்.

எனவே கம்பனிகள் நட்டம் என்று கவலைப்படாமல் இப்படியான சிறு தோட்டங்களாக தொழிலாளர்களுக்கு பிரித்து கொடுப்பது, காத்திரமான உற்பத்தி துறையாக தேயிலைத் துறையை மாற்றுவதைவிட வேறு வழியில் விமோசனம் கிடைக்கப் போவதுமில்லை.

*நன்றி வீரகேசரியிலிருந்து (05.06.2011)*

# கட்டுநாயக்கா- மலையக தொழிலாளர்களின் போராட்டம்



**சுதந்திர வர்த்தகவலய தொழிலாளர்களின் போராட்டம் தேசிய மட்டத்தில் மாத்திரமல்ல சர்வதேச மட்டத்திலும் முக்கிய செய்தியாகியது.**

**இந்த வேலை நிறுத்தத்தின் பின்னணியில் ஜே.வி.பி தொழிற்சங்கங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும் அது உண்மையல்ல என்று அறிய முடிகிறது. பெரும்பாலான தொழிலாளர்கள் வேறு தொழிற்சங்கங்களிலேயே அங்கம் வகிக்கிறார்கள்.**

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் போராட்டம் உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. தனியார் துறையினருக்கான ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை இந்த இளம் தொழிலாளர்கள் தீவிரமாக எதிர்க்கிறார்கள்.

ஓய்வூதியம் என்பது தொழிலாளர்களின் சேவைக்கால நிதி, ஊழியர் சேமலாப நிதி இவற்றிலிருந்தே வழங்கப்படும் எனத் தெரிகிறது. இதனை தொழிலாளர்கள் விரும்பவில்லை. மத்திய வங்கியின் கையிலிருக்கும் இந்த நிதிகளை வேறு தொழில்துறைகளில் முதலிடுவதற்கான ஒரு தந்திரச்செயல் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அதுவும் தொடர்ச்சியாக பத்து வருடங்கள் வேலை செய்தவர்களுக்கே இது கிட்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் சுதந்திர வர்த்தக வலயத்தில் அதற்குக் குறைந்த காலத்திலும் பலர் ஓய்வு பெறலாம்.

மிகவும் குறைந்த ஊதியம் பெறுபவர்களும் கடினமாக உழைப்பவர்களும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுமான இந்த தொழிலாளர்களுக்கு வேறு எந்தவித சமூக பாதுகாப்பும் கிடையாது.

அதுவே அவர்களை கோபமுறச் செய்தது.

தொழிலாளர்களின் போராட்டத்தில் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த இளம் தொழிலாளி ரொசான் ரட்ணசேகர கொல்லப்பட்டார்.

ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் பெருமளவு அதிரடிப்படை பொலிஸ் பிரசன்னத்துக்கு மத்தியில் வீதியில் இறங்கி மீண்டும் போராடினார்கள்.

சுதந்திர வர்த்தகவலய தொழிலாளர்களின் போராட்டம் தேசிய மட்டத்தில் மாத்திரமல்ல சர்வதேச மட்டத்திலும் முக்கிய செய்தியாகியது.

தொழிலாளர்களின் கடும் எதிர்ப்பையடுத்து அரசு தனியார் ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டிருக்கிறது.

ரொசான் ரட்ணசேகர குடும்பத்தினருக்கு ஜனாதிபதி பத்து லட்சம் ரூபா நட்டஈடாக அறிவித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் 40 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்த வேலை நிறுத்தத்தின் பின்னணியில் ஜே.வி.பி தொழிற்சங்கங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டாலும் அது உண்மையல்ல என்று அறிய முடிகிறது. பெரும்பாலான தொழிலாளர்கள் வேறு தொழிற்சங்கங்களிலேயே அங்கம் வகிக்கிறார்கள்.

ரொசான் ரட்ணசேகரவின் இறுதி ஊர்வலத்தின்போது பெருந்தொகையான படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்ததாக சர்வதேச உள்ளூர் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மலையகம்

விஷம் போல் ஏறும் விலைவாசிக்கேற்ப மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் எந்த மாற்றமும் இல்லை.

மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு 750 ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும் என நியாய உணர்வுள்ளவர்கள் தெரிவிக்கிறார்கள். மறைமுகமாக தோட்ட உரிமையாளர்களின் நலன்களுக்காக நின்று கொண்டு பகிரங்கமாக தொழிலாளர்களின் நலன்களுக்காக குரல் கொடுப்பதாக நாடகமாடுபவர்களால்தான் மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை ஒரு முடிவில்லாத தொடர்கதையாக போய்க் கொண்டிருக்கிறது.

மலையக தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எட்டப்பட்டது போல் சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டும்.

25 நாளும் வேலை செய்தால்தான் முழுமையான சம்பளத்தை பெற முடியும் என்ற நிலை மாற்றப்பட வேண்டும். நோய் நொடி என்று வந்துவிட்டால் மலையகத் தொழிலாளியின் குடும்பம் பட்டினி கிடக்க வேண்டித்தான் ஏற்படும்.

தோட்ட முதலாளிமார்களின் ஒப்பாரி என்னவென்றால் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. தோட்டங்கள் நட்டத்தில் இயங்கினால் அதனை தொழிலாளர்களிடமே ஒப்படைத்து விடுங்கள் என்ற கலாநிதி சந்திரபோஸின் கருத்து சிந்தனைக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பார்ந்த நண்பர்களே!



# ஆற்றல்மிகு தோழர்களே!

இலங்கை அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த இருபது வருடங்களாக நடந்து வந்த கொடிய மக்கள் விரோத யுத்தம் முழுமையாக முடிவடைந்து இரு வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. யுத்தமற்ற இந்த இரு வருட முடிவில் நாடெங்கும் சிறிலங்கா அரசும் அரச படைகளும் முப்படைகளினது அணிவகுப்புக்களையும் ஆயுதக் கண்காட்சிகளையும் காட்டி பெருமித கர்ஜனைகளுடன் தமது யுத்த வெற்றியைக் கொண்டாடுகின்றன.

தீவிர புலி ஆதரவாளர்களோ கொல்லப்பட்டுப்போன தமது புலித் தலைவர்களுக்காகவும் புலி இளைஞர்களுக்காகவும் முள்ளிவாய்க்காலில் கடைசியில் கொல்லப்பட்ட புலி ஆதரவாளர்களுக்காகவும் உலகம் முழுவதுவும் பிரபாகரனின் படத்தைக் கழுத்திற் கொளுவிக் கொண்டு புலிக் கொடியையும் ஏந்தியபடி ஒப்பாரி உறுமல்களை ஏழுப்பி ஆண்டுத்துவசம் கொண்டாடுகிறார்கள்.

கடந்த இருபத்தைந்து வருட காலத்தில் கொல்லப்பட்ட 40 ஆயிரம் அரச படையினரையும் 40 ஆயிரம் புலிப்படையினரையம் இங்கு இரு பகுதியிரும் நினைவு கூருகிறார்கள்.

இந்த இருபத்தைந்து வருட காலத்தில் சிறிலங்கா இராணுவத்தாலும் புலிகளாலும் கொல்லப்பட்ட சுமார் ஒன்றரை லட்சம் பேருக்கு மேற்பட்டோரை இங்கு நினைத்துப் பார்ப்பதற்கு மேலே குறிப்பிட்ட இரு பகுதியினரில் எவருமே இல்லை.

இந்த இரண்டு யுத்தப்பிரபுக்களின் படையினரால் சண்டையின் காரணமாக யாரென்று அடையாளம் பார்க்காமலே ஒரு படையினரை நோக்கி இன்னொரு படையினர் கண்டபடி நடத்திய துப்பாக்கி வெடித் தாக்குதல்களினாலும் பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களினாலும் கொல்லப்பட்ட லட்சம் பேர் சண்டைகளுக்குக் குறுக்கில் அகப்பட்டதாலேயே கொல்லப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த எண்ணிக்கை ஒரு புறமிருக்க.

சிறிலங்கா இராணுவத்தின் நேரடி சித்திரவதைகளாலும் பயங்கரவாத கொலை வெறி நடவடிக்கைகளாலும் சாதாரண தமிழர்கள் மற்றும் ஏனைய இயக்கப் போராளிகளென மொத்தத்தில் சுமார் பத்தாயிரம் பேர் இந்த இருபத்தைந்து வருடங்களில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் எனக் கணிக்கலாம்.

புலிகளின் பயங்கரவாத பழிவாங்கல் மற்றும் ஏக தலைமை வெறிக்குப் பலியான அப்பாவித் தமிழர்கள், அரசியற் தலைவர்கள், அரசாங்க நிர்வாகிகள் , ஆசிரியர்கள், ஏழுத்தாளர்கள் சமூக சேவையாளர்கள் மற்றும் ஏனைய இயக்கப் போராளிகளென தமிழ்ச் சமூகத்தின் மிகப் பெறுமதி மிக்க பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் புலிகளின் பிஸ்டல் கொலைகாரர்களாலும் புலிகளின் உளவுப் படையினராலும் புலிகளின் தற்கொலைக்காரர்களாலும் தேடித் தேடிக் கொல்லப்பட்டிருக்கிறார்கள், பிடித்துக் செல்லப்பட்டு கொடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். புலிகளால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று சொல்வது சிலருக்கு மிகைப்படுத்தப்படுவது போல ஆச்சரியமளிக்கலாம். இந்திய இராணுவம் திரும்பிப் போனதற்கு பிறகு மட்டும் உடனடியாக ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் புலிகளால் - ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு ஆதரவு கொடுத்தது, மாகாண சபைக்கு ஒத்துழைத்தது, இந்திய இராணுவத்துடன் தொடர்பாய் இருந்தது என்ற குற்றச்சாட்டுகளின் பேரில் சுற்றி வளைத்துப் பிடித்துச் செல்லப்பட்டு சொல்லொணா சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள் என்பதை இங்கு நினைவுபடுத்துவது அவசியமாகும்.

இதைவிட புலிகளால் உயிரோடு பிடித்துச் செல்லப்பட்டு பின்னர் கொல்லப்பட்ட இலங்கைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் எண்ணிக்கையும் மொத்தத்தில் ஆயிரத்துக்கும் குறைவாக இருக்கமாட்டாது. கிழக்கு மாகாணத்தில் அறுநூறு பொலிஸார் ஒரே நேரத்தில் பிடித்துக் கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

கருணாவோடு பிரிந்து சென்றார்கள் என்பதற்காக ஆயிரத்துக்கம் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கிழக்கு மாகாணத்தில் புலிகளால் கொல்லப்பட்டார்கள்.

காத்தான்குடியிலும் ஏறாவூரிலும் அம்பாறையின் முஸ்லிம் பகுதிகளிலும் சுமார் ஆயிரம் பேருக்கு மேல் முஸ்லிம் மக்கள் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

மேலும், புலிகளின் பயங்கரவாத துப்பாக்கி ரவைகளுக்கும் குண்டுத் தாக்குதல்களுக்கும் வாள் வெட்டுகளுக்கும் இலக்காகிப் பலியான சிங்களப் பொதுமக்கள் சிங்களக் குழந்தைகள் மற்றும் பௌத்த பிக்குகளின் மொத்த எண்ணிக்கையும் நிச்சயம் நான்காயிரத்துக்குக் குறைவாக இருக்க மாட்டாது.

* நாட்டு மக்களின் தனிப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் என்று பார்த்தால் இன்றைய பெறுமதியில் சுமார் ஒரு லட்சம் கோடி ரூபா சொத்துக்களை இந்த யுத்தம் அளித்திருக்கிறது.
* தமிழரோ சிங்களவரோ இலங்கையில் வாழும் பிரஜை ஒவ்வொருவரும் வெளிநாடுகளுக்கு சராசரியாக தலா ரூபா ஐந்து லட்சம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனாளியாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்
* பத்து லட்சத்துக்கு மேல் மாடுகளும் ஆடுகளும் கொல்லப்பட்டு விட்டன.
* இன்னமும் பத்து லட்சம் கண்ணிவெடிகள் வடக்கு கிழக்கின் மண்ணுக்குள்ளே உள்ளன. அவை இன்னமும் எத்தனை ஆயிரம் பேரை கொல்லப்போகின்றன அல்லது முடமாக்கப் போகின்றன என்று யாருக்கும் தெரியாது.
* வடக்கு கிழக்கின் வளமான காடுகள் அரைவாசிக்கு மேல் அழிக்கப்பட்டுவிட்டன.

**சர்வதேச நாடுகள் மின்சாரக் கதிரையில் ஏற்றித் தண்டனை வழங்கினாலும் தாங்கள் சிறிலங்காவுக்கும் சிங்கள மக்களுக்கும் துரோகம் செய்யாது தமது உயிர்களையும் அர்ப்பணிக்கத் தயாராக இருப்பதாக ராஜபக்ஸாக்கள் சொல்வதும் படுபொய்.**

**அதேபோல தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை தமது உயிர் தமிழுக்கு தமது உடல் மண்ணுக்கு என அர்ப்பணித்து தமிழர்களுக்கு சேவை செய்து கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்வதுவும் தமிழர்களின் நல்வாழ்வுக்காக தமது சொத்து சுகமெல்லாம் இழந்து ஞானிகள் போல சேவை செய்வதாகத் தமிழ் அமைச்சர்கள் விடும் கதைகளும் பச்சைப் பொய்களே.**

இலங்கையில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகால கொடிய யுத்தம்

* இரு பகுதி யுத்தப்பிரபுக்களாலும் ஆயுதபாணிகளாக்கப்பட்டு சண்டைகளில் ஈடுபடுத்தப்பட்ட சுமார் 80000 தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்களைக் கொன்றிருக்கிறது,
* ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட பொதுமக்களைக் கொன்றிருக்கிறது,
* முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்களை காலற்றவர்களாகவோ கையற்றவர்களாகவோ முடமாக்கியிருக்கிறது
* சுமார் ஒரு லட்சம் பெண்களை விதவைகளாக்கியிருக்கிறது:
* ஆயிரக்கணக்கான குழந்தைகளை தாய் தந்தை எவருமில்லாத அனாதைகளாக்கியிக்கிறது
* சில ஆயிரக்கணக்கானவர்களை உள அதிர்ச்சி நோய்க்கு ஆளாக்கியிருப்பதோடு பல நூற்றுக்கணக்கானவர்களை நிரந்தர மனநோயாளிகளாக்கியிருக்கிறது
* இருபது லட்சம் பேரை அகதிகளாக்கியது,
* பத்து லட்சம் பேரை நாட்டை விட்டே ஓடப்பண்ணி விட்டது,

அவற்றை எந்தளவுக்கு மீண்டும் வளர விடுவார்களோ தெரியாது . அப்படித்தான் விட்டாலும் அவை வளர இன்னும் யுத்தமற்ற இருபது வருடங்கள் வேண்டும்.

* யாழ்ப்பாணத்தின் சின்னமாக எந்தப் புயலுக்கும் வீழாது நிமிர்ந்து நின்ற எழுபது லட்சம் பனை மரங்களில் முப்பது லட்சத்துக்கு மேற்பட்ட பனைமரங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

இப்படி பல்வேறு விதமான அழிவுகளையும் இழப்புகளையும் துயரங்களையும் துன்பங்களையும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த லட்சணத்தில் வென்ற இராணுவத்துக்காக விழாக் கொண்டாடுவதனாலும் செத்த புலிகளுக்காக ஒப்பாரி வைப்பதனாலும் தமிழ் மக்களுக்கும் சரி சிங்கள மக்களுக்கும் சரி என்ன நன்மைகளை அவை தரப் போகின்றன. மாறாக. இந்த இரு பகுதி யுத்தப் பிரபுக்களும் மக்களின் வெந்த புண்களில் மீண்டும் மீண்டும் வேல் பாய்ச்சுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

இந்த கொண்டாட்டங்கள் மற்றும் ஒப்பாரிகள் மூலம் அரச தலைவர்களுக்கும் புலிப்பிரமுகர்களுக்கும் திட்டவட்டமான பச்சையான சுயநல நோக்கங்கள் இருக்கின்றன என்பதை நாம் அடையாளம் காண முடியும். இந்த கொண்டாட்டங்கள் மூலமும் ஒப்பாரிகள் மூலமும் முறையே அரசாங்கத்தவர்கள் சிங்களவர்கள் மீதும் புலிப் பிரமுகர்கள் தமிழர்கள் மீதும் தத்தமது செல்வாக்கைத் தக்க வைப்பதிலும் மக்கள் மத்தில் சண்டித்தனக்காரர்களாக வலம் வருவதைத் தொடர்வதிலும் அக்கறை கொண்டே செயற்படுகிறார்கள். மேலும் இருபகுதியினரும் தமக்கு இந்தப் பின்னணியில் வசதிப்பட்ட இடங்களிலும் வகைகளிலும் பொதுமக்களின் சொத்துக்களையும் வருமானங்களையும் சூறையாடுவதில் மிகவும் அக்கறையாகச் செயற்படுகிறார்கள்.

சர்வதேச நாடுகள் மின்சாரக் கதிரையில் ஏற்றித் தண்டனை வழங்கினாலும் தாங்கள் சிறிலங்காவுக்கும் சிங்கள மக்களுக்கும் துரோகம் செய்யாது தமது உயிர்களையும் அர்ப்பணிக்கத் தயாராக இருப்பதாக ராஜபக்ஸாக்கள் சொல்வதும் படுபொய். அதேபோல தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை தமது உயிர் தமிழுக்கு தமது உடல் மண்ணுக்கு என அர்ப்பணித்து தமிழர்களுக்கு சேவை செய்து கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்வதுவும் தமிழர்களின் நல்வாழ்வுக்காக தமது சொத்து சுகமெல்லாம் இழந்து ஞானிகள் போல சேவை செய்வதாகத் தமிழ் அமைச்சர்கள் விடும் கதைகளும் பச்சைப் பொய்களே.

இவர்கள் ஒவ்வொருவரும் சொல்வது ஏன் பொய்யென்பதை இங்கே நான் உங்களுக்கு விபரிக்க இது இடமில்லை. நீங்களே உங்களது நண்பர்களுடனும் தோழர்களுடனும் ஆற அமர்ந்து கடந்த காலத்தில் இவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் என்னென்னவெல்லாம் சொன்னார்கள் என்னென்னவெல்லாம் செய்தார்கள் பின்னர் என்ன செய்தார்கள் இப்போது என்ன சொல்லுகிறார்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பவற்றை பட்டியலிட்டு தொகுத்துப் பாருங்கள் புரிந்து கொள்வீர்கள். நானே ஒவ்வொன்றும் சொல்ல வேண்டும் என்ற அளவுக்கு நீங்கள் ஒன்றும் தகவல் அற்றவர்களல்ல என்பதை நான் அறிவேன்..

### என் அன்பிற்கினிய நண்பர்களே தோழர்களே்

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் யுத்தத்தில் என்னென்ன நடந்தன என்ற மீளாய்வுப் பரிசோதனைகள் ஒரு புறபிருக்க ஆயுதங்கள் தாங்கியவர்களின் யுத்தமற்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழர்களாகிய எம் மத்தியில் தமிழர்களாகிய எம் தொடர்பாக, தமிழர்களாகிய எம்மாலும் தமிழர்களாகிய எமக்கும் ஏற்பட்டுள்ள நன்மை ரீதியான முன்னேற்றங்களில் முக்கியமானவை சிலவற்றையாவது இங்கு நாம் தொகுத்துப் பார்ப்பதுவும் மேலும் தொடர்ந்து எமது தமிழ்ச் சமூகம் முன்னேறுவதற்கான உடனடி அவசியத் தேவைகள் என்னென்ன மற்றும் உடனடியாக கடைப்பிடிக்க வேண்டிய வழிகளென்ன என்பதிலும் அக்கறை செலுத்துவது அவசியமாகும்.

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிமன்யு பதில்கள்

**கேள்வி: இலங்கை இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான இறுதி யுத்தத்தின் போது மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஐ.நா செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினரின் அறிக்கை பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: 2009ம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்த அந்த கொடூரமான யுத்தம் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை சொல்லொணாத் துயரங்களுக்கு ஆட்படுத்தியது. அந்த யுத்தத்தில் மனித உரிமைகள் மோசமாக உதாசீனம் செய்யப்பட்டன. படுகொலைகள் நடைபெற்றன என்பனவற்றில் எள்ளவும் சந்தேகமில்லை.

அந்த அறிக்கை இந்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசின் மீது மட்டும் வைக்கவில்லை புலிகள் மீதும் வைத்திருக்கிறது. இதில் மிகவும் வேதனையானதும், கொடுமையானதுமான வேடிக்கை என்னவென்றால் இலங்கை அரசு புலிகள் ஆகிய இரு தரப்பினருமே தமிழ் மக்களை காப்பாற்றவே இந்த யுத்தம் என்று கோரிக் கொண்டே இந்தக் கோரமான செயல்களை எதுவித பச்சாதாபமுமின்றி அரங்கேற்றின.

இச் செயல்கள் கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையே. அவற்றிற்கு பொறுப்பானவர்கள் பதிலளிக்க வேண்டும். பாதிக்கப்பட்டு இன்னமும் அல்லலுற்று பரிதவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு காலதாமதமின்றி வேண்டிய நிவாரணங்களும் வாழ்வாதாரங்களும் அளிக்கப்பட வேண்டும். ஆனால் நடப்பது என்ன? ஒரு பக்கம் இலங்கை அரசு அந்த அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை ஆராய்வோம். ஆறிக்கையின் பரிந்துரைகளை அமுல் நடத்துவது பற்றி ஆராய்வோம் என்ற மக்கள் நலன் சார்ந்த நிலைப்பாட்டை எடுப்பதற்குப் பதிலாக அறிக்கையை ஒட்டு மொதமாக நிராகரிப்பதோடு சிங்கள சமூகத்தை அரசியல் ஆதாயத்திற்காக அணி திரட்டுவதிலேயே முனைப்புடன் செயல்படுகிறது. மறுபக்கம் தமிழர்களின் இந்த அழிவுக்கு புலிகளுக்கு வக்காலத்து வாங்கி துணைபோன தமிழர் தலைவர்களும் புலம்பெயர் புலி ஆதரவாளர்களும் அமைப்புக்களும் ஊடகங்களும் அந்த அறிக்கையில் புலிகள் மீதான குற்றச்சாட்டுக்களை ஏதோ அவை அந்த அறிக்கையில் குறிப்பிடப்படாது போன்று விலக்கிக் கொண்டு அழிவுகளில் தங்களின் பங்கு பற்றிய எதுவித கழிவிரக்கமுமின்ற இலங்கை அரசை சாடுவதிலேயே மும்முரமாக இருக்கிறார்கள்.

இரு சாராரினதும் செயற்பாடுகளும் அறம் சாராதவை, அதர்மமானவை. மக்கள் நலன் சாராதவை.

இந்த அறிக்கையின் விளைவாக ஐ.நா சபை மகிந்த ராஜபக்ஷவையோ அல்லது அவருக்கு பக்கபலமாக செயற்பட்டவர்களையோ போர்க்குற்றவாளிகளாக சர்வதேச நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு நிறுத்தும் நிலைமை வரப்போவதில்லை.

எனவே இலங்கை அரசு தரப்பினரும் புலிகள் ஆதரவாக செயற்பட்ட தரப்பினரும் இந்த அறிக்கையில் அவர்களுக்கு விதந்துரைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை காலதாமதமின்றி இதய சுத்தியுடன் செயற்படுத்துவதே. புாதிக்கப்பட்டோருக்கு மட்டுமல்லாது இலங்கை மக்கள் அனைவருக்குமே நன்மை பயக்கும் செயற்பாடுகளாகும்.

***********************

**கேள்வி: தமிழ் தேசிய கூட்டமைப்பு இலங்கை அரசுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் எந்தளவில் இருக்கிறது?**

பதில்: எல்லாமே மூடு மந்திரமாக இருக்கிறது. தமிழ் மக்களால் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பெரும்பான்மை கட்சி என்ற வகையில் இன்றைய யதார்த்த நிலைமையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பதை பூசி மெழுகாமல் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் முன்வைக்க வேண்டிய கடப்பாடு கூட்டமைப்பினருக்கு இருக்கிறது. அப்படியான ஒரு தீர்வை அவர்கள் முன்வைத்தார்களா? அப்படியானால் அந்தத் தீர்வுதான் என்ன? அதற்கு அரசாங்கத்தின் பதில் என்ன? அதனை அடைவதற்கான வழிமுறைகள் எவை என்பவை பற்றி எதுவுமே அறிவிக்காமலே அதனை வெளிப்படையாக தமிழ் மக்களுக் தெரிவிப்பதற்கான பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது என்பதை பற்றிய எதுவித அக்கறையும் இல்லாமல் ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை முடிந்து விட்டது. ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் பற்றி ——— என்ற இணையதளத்தில் வெளியான கீழ்க்காணும் இரு செய்தி தலைப்புக்களே உங்கள் கேள்விக்கு சரியான பதிலாக இருக்கும் என நினைக்கிறேன்.

ஒரு தலைப்பு- "இலங்கை அரசு பேச்சுவார்த்தை ஐந்தாவது சுற்று முடிவு", "மே 12 இல் நடைபெறவிருக்கும் ஆறாவது சுற்றில் ஏழாவது சுற்றுக்கான திகதி அறிவிக்கப்படும் சுத்தி சுத்தி வாறாக..."

இன்னுமொரு தலைப்பு "அடுத்த தேர்தல் வரை இந்த நாடகம் தொடரும்"

உண்மைதான். தமிழ் பிரதேசங்களில் அடுத்துவரும் தேர்தல்களில் "இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஒன்றும் தராது. தமிழர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எனவே எங்களுக்கே உங்கள் வாக்குகளைப் போட்டு தெரிவு செய்யுங்கள்" என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்ந்தோரின் புளித்துப் போன வீராவேச பேச்சு வானை பிளக்கும். தமிழ் ஊடகங்களில் தெறிக்கும். தமிழ் மக்களும் தங்களது பொன்னான வாக்குகளை அவர்களுக்குத் தாராளமாகத் தந்து அவர்கள் அதிகார சுகபோகங்களை தொடர்ந்தும் அனுபவிக்க வழிசமைத்து கொடுப்பார்கள்.

அதே நாடகம் மீண்டும் தொடரும். - கதைவசனம் ஒன்றுதான்.

நடிகர்களில்தான் சிறிது வித்தியாசம்.

# வரலாற்றின் கலங்கரை விளக்குகள்


தோழர் ரொபேட்


தோழர் ஐயா


கூட்டணித் தலைவர் அ. அமிர்தலிங்கம்


அதிபர் ஆனந்தராஜா


தோழர் பெஞ்சமின்


தோழர் பாலநடராஜ ஐயர்


தோழர் ஜோர்ஜ்


தோழர் கதிர்


செல்வி மகேஸ்வரி வேலாயுதம்


தோழர் கேதீஸ்


தோழர் கபூர்


தோழர் இளங்கோ


தோழர் அன்பரசன்


தோழர் குமார்


தோழர் கிருபா


தோழர் முகுந்தன்


தோழர் பரா


தோழர் பாவா மாஸ்டர்


தோழர் புஸ்பராஜா


ராஜசுந்தரம்


நீலன் திருச்செல்வம்


அதிபர் இராஜதுரை


அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜா


செல்வி ராஜினி திரணகம


தோழர் ரமேஷ்


தோழர் ரட்ணராஜா


தோழர் ராசிக்


தோழர் உமா மகேஸ்வரன்


தோழர் சிறீ சபாரட்ணம்


தோழர் உமாகாந்தன்


சரோஜினி யோகேஸ்வரன்


தோழர் சிவா


தோழர் சின்னவன்


தோழர் ஷோபா


தோழர் றேகன்


தோழர் கந்தசாமி


சாம் தம்பிமுத்து


செழியன் பேரின்பநாயகம்


அறிவிப்பாளர் ரேலங்கி


விஜிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம் பக்கத் தொடர்ச்சி...

# அன்பார்ந்த நண்பர்களே!



# ஆற்றல்மிகு தோழர்களே!

2006ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு நடுப்பகுதி வரை நடைபெற்ற யுத்தத்தால் அகதிகளானோர் ஆறு லட்சம் பேர்- கிழக்கில் இரண்டரை இலட்சம் பேர், வடக்கில் மூன்றரை லட்சம் பேர் அகதிகளானார்கள். இப்போது கிழக்கில் சுமார் 10000 பேரைத் தவி1ர ஏனையவர்களெல்லாம் தத்தம் இடங்களுக்கு மீண்டும் சென்று குடியேறி விட்டார்கள். வடக்கிலும் அந்த மூன்றரை இலட்சம் பேரில் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்டோர் தத்தம் இடங்களுக்கு மீண்டும் குடியேறி விட்டார்கள். ஏனையவர்களும் இந்த வருட இறுதிக்குள் அவரவரது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கப்பட்டு விடுவார்கள் என வன்னியின் அரசாங்க அதிபர்கள் உறுதி தெரிவித்திருப்பது மனதுக்கு நிம்மதியாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளால் உடுத்த உடைகளோடு வெளியேற்றப்பட்டு 20 வருடங்களாக வடக்கு கிழக்குக்கு வெளியே ஏனைய மாவட்டங்களில் அகதிகளாக வாழ்ந்த முஸ்லிம்கள் கடந்த இரு வருடங்களாக தத்தமது தாயக இடங்களில் கணிசமான அளவில் குடியேறிவிட்டார்கள். எஞ்சியவர்களும் வேகமாக தத்தமது சொந்த பாரம்பரிய இடங்களை நோக்கிக் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

யாழ்ப்பாண குடாநாட்டுக்குள் அரச இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் சுமார் ஒரு லட்சம் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டு இருபது ஆண்டுகளாக அகதி முகாம்களில் மிகவும் பாதகமான வாழ்வு நிலைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். இவர்களில் அரைவாசிப் பேருக்கு மேற்பட்டோர் இப்போது தத்தமது இடங்களுக்குச் சென்று குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இன்னமும் யாழ்ப்பாணத்தில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் அகதிகளாக வாழ்வதாகவும் அதில் கணிசமான பகுதியினர் இன்னும் ஒரு சில மாதங்களில் தமது இடங்களுக்குச் சென்று குடியேற அனுமதிக்கப்படுவார்கள் என யாழ்ப்பாண அரச அதிபர் உறுதியாகக் கூறுகின்றார்.

ஆக மொத்தத்தில் காய்ப்பு உவர்ப்பு இன்றிப் பார்த்தோமானால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒட்டு மொத்தமாக, சுமார் இருபதாயிரத்துக்கும் குறைந்த எண்ணிக்கையுடையோரைத் தவிர ஏனைய தமிழர்களெல்லாம் தத்தம் சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறி விட்டார்கள் - மற்றவர்களும் விரைவில் தமது இடங்களுக்கு குடியேறி விடுவார்கள் என்று நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்புகள் நிறைய உள்ளன என்பதே உண்மையாகும். .

இதைவிட இந்திய மண்ணில் அகதிகளாக இருக்கும் சுமார் ஒரு லட்சம் பேரில் கணிசமானவர்கள் மிக விரைவில் மீண்டும் தம் தாயக மண்ணுக்குத் திரும்ப வேண்டும் என்று நாம் விரும்புவோமாக!.

யுத்த காலத்தில் கொழும்பை நோக்கிச் சென்று குடியேறியவர்களில் கணிசமான தொகையினர் யுத்தம் முடிந்ததும் தமது சொந்த தாயக இடங்களுக்கு மீண்டும் திரும்பிக் குடியேறி விட்டார்கள்.

எவ்வாறாயினும், யுத்தகாலத்தில் மேலைத்தேய நாடுகளுக்குச் சென்று குடியேறியுள்ள சுமார் எட்டு லட்சம் ஈழத் தமிழர்களில் ஒரு சில ஆயிரம் பேராயினும் மீண்டும் தமது தாயக மண்ணுக்கு வந்து நிரந்தரமாகக் குடியேறுவார்களா என்ற கேள்விக்கான பதில் இன்னமும் தெளிவாக இல்லை.

மக்கள் மீண்டும் சென்று தத்தம் பகுதிகளில் குடியேறிய விடயங்களோடு வேறு சில முன்னேற்றமான விடயங்களையும் நாம் பார்க்கலாம்.

* வடக்கு கிழக்கின் நகரங்களில் வர்த்தகமும் கல்வி சுகாதாரம் மற்றும் தொடர்பு சாதன வசதிகளும் மிக வேகமாக அதிகரித்திருக்கின்றன.
* வடக்கு கிழக்கில் விவசாயமும் மீன்பிடியும் பழைய நிலைக்கு விரிவாகும் வகையாக துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன
* வடக்கு கிழக்கில் வீதிப் போக்குவரத்துகள் முன்னெப்போதையும் விட மிகப் பெரிய அளவில் அதிகரித்திருக்கின்றன
* யாழ்ப்பாண நகரத்தில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி மாற்றங்களைப் பார்க்கிற போது இன்னொரு ஐந்து வருடங்களில் யாழ்ப்பாண நகரங்களின் தோற்றங்களே முந்தைய நிலையிலிருந்து நவீன நிலையை நோக்கிய பாரிய மாற்றங்களை அடைந்து விடும் என இப்பவே எதிர்வு கூறக் கூடியதாக உள்ளன.

வடக்கு கிழக்கின் வளர்ச்சிகளைத் துரிதப்படுத்தும் வகையாக ஊக்குவிப்பதற்கு அவசியமான சில விடயங்கள் வேகமாக நிறைவேற்றப்பட வேண்டும் - இலங்கை அரசு அக்கறையோடு அவற்றை நிறைவேற்ற வேண்டும். அவற்றில் சில,

* இலங்கையின் ஏனைய பகுதிகளோடு வடக்கு கிழக்கை தேசிய ரீதியில் நன்கு ஒருங்கிணைக்கும் ஏ9 வீதி மற்றும் ஏ32 வீதி உட்பட வட, கிழக்கின் பிரதானமான வீதிகள் எல்லாம் கால தாமதம் இன்றி போக்குவரத்துக்களின் அதிகரித்த வளர்ச்சிகளைக் கருத்திற் கொண்டு புனரமைப்பு செய்யப்பட வேண்டும்
* ஓமந்தை தொடக்கம் காங்கேசன்துறை வரையான புகையிரதப் பாதையும் தலைமன்னார் தொடக்கம் மதவாச்சி புகையிரதப் பாதையும் துரிதமாக மீளமைக்கப்பட வேண்டும்
* பலாலி விமான நிலையம் சர்வதேச பயண விமானங்களுக்கான வசதிக்களுக்கு உரியவகையில் புனரமைக்கப்பட்டு சர்வதேச போக்குவரத்துக்களுக்காகத் திறந்து விடப்பட வேண்டும்
* வடக்கு கிழக்கின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த அளவுக்கு மின்சாரம் வழங்கும் வகையாக வடக்கு கிழக்கில் மின்சார வழங்கல் இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
* வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிமெந்து, கல்லு, மணல் என்பன நியாயமான விலையிலும் கள்ளமார்க்கெட்டை நாட வேண்டியில்லாத வகையாகவும் வழங்கப்பட வேண்டும்.
* வடக்கு கிழக்கில் விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு சுலபமான முறையிலும் குறைந்த வட்டியிலும் நீண்டகாலத்தில் திரும்பச் செலுத்துதல் என்ற அடிப்படையிலும் வங்கிக் கடன்கள் தாராளமாக வழங்கப்பட வேண்டும்
* வடக்கு கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயாராக முன்வருபவர்களுக்கு அரசாங்கம் இனவாதக் கண்ணோட்டங்களுக்கு அப்பாற்பட்டு ஒத்தாசைகளை வழங்குவதோடு முதலீட்டாளர்களுக்கு அரசியற் சண்டித்தனம் பண்ணுவோர் மற்றும் கப்பம் வசூலிப்போரின் தொல்லைகள் இல்லாத வகையான நிலைமைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறான சில ஏற்பாடுகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டாலே போதும் முப்பது ஆண்டு கால அழிவை வடக்கு கிழக்கு மக்கள் இன்னும் மூன்று வருடங்களுக்குள் சரிப்படுத்தி விடுவார்கள்.

அன்பின் நண்பர்களே! தோழர்களே!

முடிவடையாத இக் கடிதத்தை கண்ணோட்டத்தின் இந்த இதழில் இத்தோடு முடிக்கிறேன். அடுத்த கண்ணோட்டத்தில் இதன் தொடர்ச்சியை உங்களுக்கு வெளியிடுவேன் எனக் கூறி இங்கு விடைபெறுகிறேன்.

உங்கள் அன்பின்

**அ.வரதராஜப் பெருமாள்**

1ம் பக்கத் தொடர்ச்சி...

## கிழக்கில் பொருளாதார இயற்கை வளம் உள்ள அரசகாணிகள் பிறருக்கு வழங்கப்படுவது வரையறைசெய்யப்படவேண்டும்!...

இவர்களுக்கும் 40 - 50 வருட அனுபவமுள்ள் தென்னி லங்கை முதலீட்டாளர்களுக்கும் மடுவிற்கும் மலைக்குமுள்ள வித்தியாசம் நிலவுகிறது. அனுபவம் குறைந்த புதிய முதலீட்டாளர்களுக்கு சிலகாலம் தேவையாக உள்ளது.

உள்ளூரில் இந்நிலை நிலவும்போது தென்னிலங்கைப் பகுதியில் இருந்தும், பல வெளிநாட்டு நிறுவனங்களும், முதலீடு செய்வதில் போட்டிபோட்டுக் கொண்டு அரசவளங்களை ஈடுபடுத்தி வந்தவர்களும், அரசியல் பலம் உள்ளவர்களும் மிகவும் விரைவாக கிழக்கு மாகாணத்திற்கு வந்து முதலீட்டை ஆரம்பிக்கின்றனர். இதனால் எமது பிரதேசத்தில் உள்ளவர்கள் முதலீடு செய்வதற்கு தயாராகும் முன்னே எமது வளங்கள் உள்ள அரசகாணிகள்

ஏனையோருக்கு வழங்கப்பட்டு விடுகின்றன. இவர்கள் அரசின் செல்வாக்கு மிக்கவர்களாகவும் உள்ளனர். சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பாவித்து உயர்மட்ட அழுத்தத்துடனும் ஆதரவுடனும் குறுக்கால் சென்று காணியைப் பெறும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே எமது பிரதேசத்தில் உள்ளவர்களுக்கே எமது பிர தேச அரச காணிகள் வளமுள்ள காணிகள் வழங்கப்பட வேண்டும். ஒரு சிலரின் தனிப்பட்ட நலனுக்காக வளமுள்ள காணியை வெளியாட்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்க முடியாது. இதற்கு உடைந்தையாக இருப்பவர்கள் இத்திட்டங்களைக் கைவிட வேண்டும் திறந்த வெளிக் கொள்கை எல்லா விடயங்களுக்கும் ஏற்புடையதல்ல. இது பிரதேசத்தின், மாவட்டத்தின், மாகாணத்தின், நாட்டின் இறைமையைப் பாதிக்கும். இப்படியானால் அரசு தென்னிலங்கை பகுதியில் இதை வழங்க வேண்டும். அமைச்சர்களின் நலனுக்கும், சில வெளிநாடுகளின் ஒரு சில அதிகாரிகளின் தரகர்களின், நலனுக்காக எமது பிரதேசம் பறிபோவதை வளங்கள் சூறையாடப்படுவதையும் நாம் கையேந்தும் நிலையை ஏற்கமுடியாது. நாம் மண்டியிடவும் முடியாது. இது எமது வளங்கள், தமிழ் மக்களின் சொத்து இதற்கு உரமிட்டவர்கள் தமிழ் மக்கள். இதை பாதுகாப்பதற்காக பல்லாயிரக்கணக்கான உயிர்களை உடைமைகளையும் பறிகொடுத்தவர்கள். இதில் எமது இறைமையும் உண்டு. இது தொடர்பாக மத்திய, மாகாண அரசுகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கிழக்கு மாகாணசபையில் இது தொடர்பாக நான் பல தடவைகள் விவாதித்தும் மீண்டும் மீண்டும் காணி வழங்கப்படுவதும் இது பற்றிய முறைப்பாடு ஏதும் வரவில்லை என முதலமைச்சர் கூறுவதும் என்னை வியப்புக்குள் ஆழ்த்தியுள்ளது இதன் காரணமாக கிட்டத்தட்ட நான் அறிந்தவரையில் காணி வழங்கிய விபரத்தை தெரியப்படுத்துகின்றேன். குறிப்பாக

(1) திருகோணமலை மாவட்டத்தில் இறக்கக் கண்டியில் இருந்து புடவை கட்டு வரையான கடற்கரை பிரதேசம் 1500 ஏக்கருக்கு மேற்பட்ட அரச காணிகள் சுற்றுலா அபிவிருத்திக்கென வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(2) திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவில் 1400 ஏக்கர் காணி உப்பு உற்பத்தி செய்ய வழங்கப்பட்டுள்ளது.

(3) மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவில் சின்னப் புல்லுமலை முருகன் கோயில் முன்வீதிப் பக்கம் 3 ஏக்கர் மலை வழங்கப்பட்டு சரியான நடைமுறை விதிகள் பின்பற்றப்படாமல் பாரியமலையை உடைத்து விற்பனை செய்கின்றனர்.

(4) திருகோணமலை மாவட்டத்தில் இந்துக்களின் புனிதப் பிரதேசமான கன்னியா வெந்நீர் ஊற்று அமைந்துள்ள காணிப்பிரதேசம் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(5) மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 212 சி கிராமசேவையாளர் பிரிவில் பெரியதீவு சல்லித்தீவு (பனிச்சக் கேணிப்பகுதி) உயிரியல் ஆய்வுமையம் அமைப்பதற்கென காணியை பெற்று உல்லாச விடுதி கட்டுவதற்கு தனியாருக்கு வழங்கப்படப் போவதாக அறிகின்றேன்.

(6) மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள க ாண்டியன்குளம் கால் நடைக்குரிய மேச்சல்தறை அன்னாசித் தோட்டம் அமைக்க 1000 எக்கர் காணி ஈரான் கம்பனிக்கு வழங்கப்படப் போகின்றது.

(7) திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பற்றை பிரதேச செயலாளர் பிரிவில் சோமாவதி புனிதப் பிரதேசத்தில் இருந்து சேருவெல புனித பிரதேத்தெற்கென அடர்ந்த காடுகள் ஊடாக வீதியமைக்கப்பட்டு இதன் இருபக்கமும் மீள்குடியேற்றம் என்னும் போர்வையில் புதிய குடியேற்றம் உருவாக்கப்படுகின்றது.

(8) திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கந்தளாய் பகுதியில் 15 ஆயிரம் ஏக்கர் காணி வாழைப்பழச் செய்கைக்கென வழங்கப்பட்டுள்ளது.

(9) மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மகாவலி அபிவிருத்தி என்னும் போர்வையில் புனானையில் உள்ள வாழைச்சேனை காகித ஆலைக்கு சொந்தமான காணிகள் 1500 ஏக்கருக்கு மேற்பட்டவை வழங்கப்பட்டுள்ளது.

(10) மட்டக்களப்பு மாவட்டத்தில் - வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் சுங்காங்கேணி, சேத்துக்குடா, காயான்கேணி, பனிச்சங்கேணியில் 400 ஏக்கர் களப்புப்பகுதி இறால் வளர்ப்பிற்கு வழங்கப்பட உள்ளது.

(11) மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதியில் முகத்துவாரப் பகுதி பாலமீன்மடு நாவலடி கல்லடி இவைகள் மீன்பிடிக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளாகும். இப் பகுதிகளில் அரச தனியார் காணிகளில் வெளிநாட்டு நிறுவனத்திற்கு ஐந்து நட்சத்திர உல்லாச விடுதிகள் கட்டுவதற்கு முயற்சிகள் நடப்பதாக தெரியவருகின்றது.

(12) மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் குடும்பிமலை, மியான்கல் பகுதியில் 1000 ஏக்கர் விவசாயம் செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளது.

(13) பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மண்முனைதுறை பகுதியில் உள்ள தீவு பறவைகளின் சரணாலையமாகவும் மீன்கள் தங்கி நின்று முட்டையிடுவதும் மீன்கள் பாதுகாப்பாக இருப்பதற்கும் மண்முனை துறையை நோக்கி வெள்ளம் போவதை தடுக்கும் மேடாகவும் இருக்கின்றது. இதையும் ஹொட்டல் கட்டுவதற்கு வெளிநாட்டு கம்பனிகளுக்கு நீண்டகால குத்தைகைக்கு விட முயற்சிகள் நடக்கின்றன.

(14) மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எல்லைக் கிராமமான 213 சி கிராமசேவையாளர் பிரிவை சேர்ந்த தோணிதாட்டமடு புஞ்ஞாங்கேணி போன்ற பிரதேசக் காணிகள் பொலன்நறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(15) மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கெவிழியாமடு, கச்சைகொடிசுவாமிமலை உள்ள தமிழர்களினது காணி அனுமதி அற்றமுறையில் சில பெரும்பான்மையினரால் அத்துமீற வீடுகள் கட்டப்படுகின்றன. இந்தக் காணிகள் வழங்கப்பட்ட முறையில் காணி வழங்கும் நடைமுறை விதிகள் பின்பற்றப்படாமை, பிரதேச முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமையளிக்கவில்லை, திட்டமிட்ட அத்துமீறிய குடியேற்றங்கள் போன்றவைகளை முதலமைச்சர் அவர்கள் விரைந்து தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் தவறானவர்களுக்கு இக்காணி வழங்குவதில் மாகாணசபையும் உடைந்தையாக உள்ளதா என்னும் வினாவிற்கு முதலமைச்சர் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் புயலாக நிகழ்ந்த ஆட்சி மாற்றம்



**தமிழகத்தில்** ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது இந்த ஆட்சி மாற்றம் இலங்கையில் எத்தகைய தாக்கத்தை செலுத்தும் என்பது முக்கியமான விடயம் ஆகும்.

தமிழக மாநிலங்களவை தேர்தலுக்கு முன்னும் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னும் உடனடியாகவே ஈழத்தமிழர்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். என்பதை புதிய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் சமத்துவமான வாழ்வொன்று தமிழர்களுக்கு கிட்ட வேண்டும் என்று அறிக்கையிட்டுள்ளார். ஐ.நாவின் ஆலோசனைக் குழுவின் அறிக்கையையும் அவர் வரவேற்றுள்ளார்.

அவர் மாத்திரமல்ல, இந்தியாவின் இரு பிரதான இடது சாரி அரசியல் கட்சிகளான சி.பி.ஐ, சி.பி.எம், பாரதிய ஜனதா கட்சியும் தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளுமே ஐ.நா ஆலோசனைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்கள்.

புதிய தமிழக அரசு மத்திய அரசுடன் நல்லிணக்கத்துடனேயே செயற்படும். மத்திய அரசும் மக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிபலிப்புக்களை கரிசனைக்கு எடுத்தாகவேண்டும்.

செல்வி ஜெயலலிதா அவர்கள் ஈழத் தமிழர் பிரச்சனை சர்வதேச பிரச்சனையாக மாறிவிட்ட நிலையில் தமிழக அரசு ஒரு வரையறுக்குள்ளேதான் வலியுறுத்த முடியும். மத்திய அரசே இதில் செயற்பட வேண்டியது அவசியம் என்பதையும் யதார்த்தமாகவே தெரிவித்துள்ளார்.

சிலரது குறுகிய நிகழ்ச்சி நிரலுக்கேற்ப அவர் செயற்பட முடியாது.

தமிழக முதல்வரின் அழுத்தம் திருத்தமான வேண்டுகோளை மத்திய அரசு நிச்சயம் கவனத்தில் எடுக்கும்.

இலங்கை அரசும் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் கோரிக்கையை அலட்சியப்படுத்தி விட முடியாது

காழ்ப்புணர்வுடன் கூடிய நடவடிக்கைகள் விபரீதங்களுக்கே இட்டுச் செல்லும்.

இதனைப் புரிந்து குறிப்பறிந்து செயற்படுவது இலங்கை அரசின் கடமை. பேரினவாத போதையிலிருப்பவர்களை மீறி அரசு செயற்பட்டாக வேண்டும். அதே போல் தமிழ் குறுகிய பழிவாங்கல் உணர்ச்சி, எஞ்சிய புலிகளின் நிகழ்ச்சி நிரலில் இருந்து இதனை அணுக முற்படுபவர்கள் ஓரங்கட்டப்பட வேண்டும்.

இவர்களின் செயற்பாடுகள் மேலும் மேலும் தமிழ் மக்களின் வாழ்வை துன்பகரமான சூழ்நிலைக்கே இட்டுச்செல்லும்.

எனவே நிதானமாகவும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டிய தருணம் இது.

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கும் ஜனநாயக வாழ்வொன்றை இலங்கையில் மீள்கட்டியெழுப்புவதற்குமான தருணமாகவே இதனை கருத வேண்டும்.

-சுகு-

## ஆயுதங்களும் அதிகார அகங்காரமும் அற்ற உலகை நோக்கி ...



**மியன்மாரில்** ஆங்-சாங்-சூகி தலைமையிலான இயக்கம் யேமன், அல்ஜீரியா, பஹ்ரேன், சிரியா போன்ற நாடுகளில் நிலவும் ஜனநாயக இயக்கங்களை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

ஆபிரிக்காவில் பல நாடுகளில் நிலவும் சர்வதிகார ஆட்சிகள் மறைய வேண்டும். லத்தீன் அமெரிக்காவிலும் அவ்வாறே.

ஆட்சி உரிமை என்பது அதிகாரத்திலுள்ளோருக்கு மாத்திரமல்ல. பிரதானமாக அது பெருவாரியான மக்களுக்கு!

மக்களாட்சி என்றபதம் பல நாடுகளில் வெறும் சொல் அலங்காரமாக மாறி வருகிறது

விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் தமது சுகபோகங்களுக்காகவும், அந்தந்த நாடுகளின் வளங்களைச் சுரண்டும் சக்திகளுக்கு ஆதரவாக சொந்த நாட்டு மக்களை அடக்கு முறையின் கீழ் மரணமும்- பிணிவும்- பசியுமாக ஒடுக்கி வைத்திருக்கின்றனர். இந்த உலக ஒழுங்கு மாறவேண்டும்.

இந்த முறைதான் நியாயமான மக்கள் எழுச்சிகளை மாத்திரமல்ல பதிலாக சுயாதீனமான பயங்கரவாத பாசிசக் குழுக்களையும் உலகளாவிய அளவில் உற்பத்தி செய்திருக்கின்றன.

இந்தக் குழுக்களும் அன்றாடம் எதிர்ப்பை காட்டுவது என்ற பேரில் சாதாரண மக்களின் உயிர்களுக்கு பெருந் தீங்கிழைத்து வருகின்றன. இறையாண்மை என்ற பேரில் சொந்த நாட்டு மக்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளை அநீதிகளை யாரும் தட்டிக்கேட்ட முடியாது என்ற நிலை ஏற்பட்டு வருகிறது.

அதாவது எனது மனைவியை எனது பிள்ளைகளை நான் அடிப்பேன், உதைப்பேன், கொலை கூடச் செய்வேன் யாரும் கேட்ட முடியாது என்று சொல்வது போல் தான். இது எந்தளவு பொருத்தமற்றதோ அதே போல் பொருத்தமற்ற சொல்லாகவே சிலவேளைகளில் இறைமையும் காணப்படுகிறது.

ஒரு நாட்டின் மீது நடைபெறும் ஆக்கிரமிப்புக்கள் அல்லது ஒரு சமூகத்தின் மீது நிகழும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றில் அந்த நாட்டின் அந்த சமூகத்தின் இறையாண்மைக்கு அர்த்தம் இருக்கிறது.

ஆனால் இறையாண்மை என்ற சொல்லாடலின் கீழ் மனிதகுலவிரோத - சர்வாதிகார - அடிப்படைவாத அரசுகள் தப்பித்துக் கொள்ள உலக சமூகம் அனுமதிக்க முடியாது.

தவிர ஆயுத வியாபாரம், ஆயுதப் பெருக்கம் என்பன தற்செயலாக நிகழ்கின்றனவா என்ற சந்தேகமும் சாதாரண உலக மனிதனின் மனங்களில் எழுந்து கொண்டே இருக்கிறது. நாசகார ஆயுதங்களை ஒழித்துக் கட்டுதலும் இந்த தருணத்திற்குரிய காரியமாகும்.

உலகில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவது இராணுவ சர்வாதிகாரத்தை இல்லாதொழிப்பது, பயங்கரவாதத்தை உதிர்ந்து உலர்ந்து போகச் செல்வது எல்லாவற்றுக்கும் அப்பால் ஆயுதங்கள் அற்ற உலகு என்பது முக்கியமானதாகும்.

ஐ.நாவும் இதனை பிரகடனமாக்க முயல வேண்டும்.

காந்தியவழியிலான உலக ஒழுங்கு மாத்திரம் தான் இன்றைய மாற்றாகும்.

## வடக்கு வலிகாமம் மீள்குடியேற்றம்



**வடக்கு** வலிகாமத்தில் மக்கள் படிப்படியாக மீள்குடியேற்றப்படுவது நல்ல செய்தி.

உள்ளக கட்டமைப்பு வசதிகள் இங்கு மேற்கொள்ளப்படுவது மிக முக்கியமான விடயம்.

02 பக்கட் சீமெந்து 12 தகரங்களுடன் வாழ்க்கையை ஆரம்பிக்க முடியாது.

பாடசாலை, தொழில், குடிநீர், பாதை, சுகாதரம் என்பன உடனடி முக்கியத்துவம் வாய்ந்தவை.

வடக்கு வலிகாமத்தில் ஆங்காங்கே சில கிணறுகள் துப்பரவாக்கப்பட்டிருக்கின்றன.

அங்கு குடியேறிய மக்களுடன் இணைந்து பிரதேச செயலகம் தற்காலிக பாதையை அமைத்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அரைச் சுவர் வீடுகளை கட்டித்தர உத்தேசித்துள்ளது. அங்குள்ள பாடசாலைகள் சீர்திருத்தப்பட்டால்தான் அவர்கள் கணிசமான அளவில் மீள்குடியேறலாம்.

வீடமைப்புத் திட்டங்கள் முதலில் நிலமுள்ளவர்களுக்குத்தான் என்று கூறப்படுகிறது. வடக்கு வலிகாமத்தைச் சேர்ந்த நிலமற்றவர்களுக்கும் வீடமைப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு வலிகாமத்தில் இன்னும் பெருமளவிலான நிலங்கள் மக்களிடம் திரும்பி வழங்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் 56 ஆயிரம் பேர்வரை உறவினர்கள், நண்பர்கள் விடுகளிலும், முகாம்களிலும் வசிக்கிறார்கள் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மேலதிகமாக மண்டைதீவு, பொன்னாலை பகுதி உயர்பாதுகாப்பு வலயங்களும் விரைவாக தளர்த்தப்பட்டு மக்கள் குடியேறுவதற்கு வசதிகள் செய்ய வேண்டும்.

வன்னியில் மீள்குடியேறும் மக்களுக்குரிய இத்தகைய வீடமைப்புத் திட்டங்கள் எப்போது ஆரம்பிக்கும் என்று மக்கள் கேட்கிறார்கள்.

கொழும்பு யாழ் ரயில்சேவை இன்னும் இரண்டு வருடங்களில் பூத்தியாகிவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடி அகற்றல் இன்னும் நீண்டகாலம் செல்லலாம்.

ஆனால் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பகுதிகளில் மக்களின் மீள்குடியேற்றம் துரிதப்படுத்தப்பட வேண்டும். அங்கு சிங்கள குடியேற்றம் நிகழ்ந்துவிடும் என்ற அச்சம் நிலவுகிறது. இந்த அச்சத்தை போக்குவது அரசின் கடமை.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் [illegible] பிட்டிய, பொரலஸ்கமுவ சி.ஆர்.சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org